# உ, பாரதிதாசன்

**பிறப்பு:** *29.04.1891*

**இயற் பெயர்:** *கணகசுப்புரத்தினம்*

**இடம் :** *புதுச்சேரி*

**பெற்றோர் :** *பெரிய வணிகரான கனக சபை முதலியார் மற்றும் இலட்சுமி அம்மையார் ஆவர்*

**துணைவி :** *பழநி அம்மையார்*

**குழந்தைகள் :** *மன்னர் மண்ணன் என்ற 1 மகனும் 3 பெண்குழந்தைகளான (சரசுவதி.கண்ணப்பன், வசந்தா.தண்டபாணி, இரமணி.சிவசுப்ரமணியன்)*

**இறப்பு :** *21.04.1964*

**வாழ்ந்த காலம்: (72 ஆண்டுகள்)**

Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

## பாரதியாருக்கு வழங்கும் புனைப்பெயர்கள்:

*புதுவையிலிருந்து வெளியான தமிழ் ஏடுகளில்,*

- *“கண்டழுதுவோன்“,*
- *“கிறுக்கன்“,*
- *“கிண்டல்காரன்“,*
- *“பாரதிதாசன்“*

*எனப் பல புனைப் பெயர்களில் எழுதி வந்தார்.*

## வேறு சிறப்புப்பெயர்கள்:

- *புரட்சிக்கவி என்று (அறிஞர் அண்ணா)*
- *புரட்சிக்கவிஞர் என்று (பெரியார்)*
- *பாவேந்தர்*
- *புதுவைக்குயில்*
- *பகுத்தறிவு கவிஞர்*

- தமிழ்நாட்டு இரசுல் கம்சதேவ்
- இயற்கை கவிஞர்

## பாரதிதாசனின் கவிதை நூல்கள்

1. இசை அமுது
2. பாண்டியன் பரிசு
3. எதிர்பாராத முத்தம்
4. சேரதாண்டவம்
5. அழகின் சிரிப்பு
6. புரட்சிக்கவி
7. குடும்ப விளக்கு
8. இருண்ட வீடு
9. குறிஞ்சித்திட்டு
10. கண்ணகி புரட்சிக்காப்பியம்
11. மணிமேகலை வெண்பா
12. காதல் நினைவுகள்
13. கழைக்கூத்தியின் காதல்
14. தமிழச்சியின் கத்தி
15. இளைஞர் இலக்கியம்
16. சுப்பிரமணியர் துதியமுது
17. சுதந்திரம்
18. தமிழியக்கம் (ஒரே இரவில் எழுதியது)

Sirpigal IAS Academy Think Imagine Feel Do

## பாரதிதாசனின் நாடகங்கள்:

1. சௌமியன்
2. நல்ல தீர்ப்பு
3. பிசிராந்தையார்
4. (சாகித்ய அகாடமி விருது பெற்றது)



Sirpigal IAS Academy Think Imagine Feel Do

5. சக்திமுற்றப் புலவர்
6. அமைதி ஊமை (தங்கக் கிளி பரிசு)
7. இரணியன் அல்லது இணையற்ற வீரன்
8. சௌமியன்
9. படித்த பெண்கள்
10. இன்பக்கடல்
11. நல்லதீர்ப்பு
12. அம்மைச்சி
13. ரஸ்புடின்
14. அமைதி

## உரைநடை நூல்கள்

- திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார்
- சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

## நடத்திய இதழ்கள்

- குயில்
- முல்லை( முதலில் தொடங்கிய இதழ்)

## பாரதிதாசன் நூல்கள் கதை வடிவில்

**தமிழச்சியின், தமிழ் இயக்கம்** நடத்திய பட்டிமன்ற விழாவில் பங்கேற்ற பாரதிதாசன் அரங்கத்தில் கூடியிருந்த இலக்கிய ஆர்வலர்களான இளைஞர்களுக்கும் **படித்த பெண்களுக்கும்** வணக்கத்தை தெரிவித்தார் போட்டியாளர்களாக **மணிமேகலை, சௌமியன், சஞ்சீவி, இரணியன்** ஆகிய நால்வரும் பங்கேற்றனர். அந்த நால்வர்களுக்கும் கொடுக்கப்பட்ட தலைப்பு **உண்மை வீரன்** மற்றும் **பாண்டியனா சேரனா** இந்த தலைப்பை கொண்டு நால்வரும் தங்கள் திறமைகளை பேச்சின் மூலமாக வெளிப்படுத்தினர். அரங்கேறிய இருதரப்பு வாதமும் **இசையமுது** போலவும் **இருண்ட குடும்பத்தில்** விளக்கேற்றியது போலவும் இருந்தது போட்டியாளர்கள் பேசும்


Sirpigal IAS Academy
Think Imagine Feel Do

போது ஏற்பட்ட சில பிழைகளைக் கண்டு பாரதிதாசன் அவர்களை திட்டாமல் அவர்களை அழைத்து **எதிர்பாராத முத்தம்** இட்டு நல்ல தீர்ப்பு கொடுத்து வாழ்த்துக்கள் சொல்லி விடைபெற்றார்.

## பாரதிதாசன் பற்றிய் முக்கிய தகவல்கள்:

- தம்முடைய தொடக்க கல்வியை திருப்புளி சாமியாரிடம் பயின்றார்
- இவர் தமிழை புலவர் பு.அ.பெரியசாமியிடம் அவர்களிடம் பயின்றார்
- பதினாறு வயதில் புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார்.
- பாரதியின் மீது கொண்ட பற்றின் காரணமாக கனகசுப்புரத்தினமான தம் பெயரை பாரதிதாசன் ஆக மாற்றிக்கொண்டார்.
- பிரபல எழுத்தாளரும், திரைப்படக் கதாசிரியரும், பெரும் கவிஞரான இவர், அரசியலிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராக, 1954-ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- தந்தை பெரியாரின் விரத் தொண்டராகவும் விளங்கினார். மேலும் அவர் திராவிடர் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். அதன் காரணமாகக் கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்றவற்றினை தனது பாடல்கள் மூலம் பதிவு செய்தார்.
- இவரிடம் தொடக்கல்வி பயின்றவர் வாணிதாசன்
- புரட்சிகவி இவரின் கவித்திறன் கண்டு "நாவலர் சோமசுந்தர பாரதியார்" தலைமையில் ***அறிஞர் அண்ணா*** அவர்கள் இவருக்கு ***"புரட்சிக்கவி"*** என்ற பட்டத்தையும் 25000 ரூபாய் நன்கொடையும் அளித்தார்
- வ.ரா.வின் அழைப்பின் பேரில் ***"இராமனுஜர்"*** என்னும் படத்திற்கு திரைப்படப்பாடல் எழுதினார்.
- நகைச்சுவை உணர்வு மிக்கவர், நன்கு பாடுவார், உடலை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவார். சிலம்பம், குத்துச்சண்டை, குஸ்தி பயின்றார். வீடு என்று இருந்தால்

கோழி, புறா, பசு மூன்றும் இருக்க வேண்டும் என்பார். அவற்றை தானும் வளர்த்துவந்தார்.

## பாரதிதாசனின் சிறப்புகள்:

- "அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன்" என்று புதுமைப்பித்தன் இவரை புகழ்ந்துள்ளார்
- "பாரதிக்குப் பிறகு தமிழ்நாட்டில் ஓர் உண்மையான கவி" என்று கு.ப.இராசகோபாலன் கூறியுள்ளார்
- "அவர் தம் பாடல்களைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகி விடுவான்" என்று சிதம்பரநாத செட்டியார் புகழ்ந்துள்ளார்
- புரட்சிக்கவி அவர், புதிய கவிதையை சிருஷ்டி செய்கிறார்; இயற்கையாகவே செய்கிறார்; தமிழ் மொழியில் புதியவளைவும், நெளிவும் மெருகும் ஏற்றுகிறார்; அவர் இசை வெறியில் கவிதைக் கனலுடன் பாடும்போது நாம் எத்தனை மணி நேரம் வேண்டுமானாலும் சலிப்பின்றிக் கேட்டு இன்புறலாம். இது உண்மை! மறுக்க முடியாத உண்மை என்று வி.ஆர்.எம்.செட்டியார் புகழ்ந்துள்ளார்
- "குயிலின் பாடலும் மயிலின் ஆடலும் வண்டின் யாழும் அருவியின் முழவும் இனிக்கும், பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்" என்று திரு.வி.க பாரதிதாசனை பாராட்டியுள்ளார்
- "தடையேதும் இல்லை இவர் நடையில், வாழைத் தண்டுக்கோ தடுக்கின்ற கனுக்களுண்டு" என்று சுரதா புகழ்ந்துள்ளார்
- தமிழக அரசாங்கம் அவர் பெயரில் "பாரதிதாசன் பல்கலைக்கழகம்" என்ற மாநில பல்கலைக்கழகம் ஒன்றை திருச்சியில் நிறுவியுள்ளது.
- மேலும் அவரது நினைவை போற்றும் வகையில் ஆண்டு தோறும் தமிழில் சிறந்து விளங்குபவர் ஒருவருக்கு பாரதிதாசன் விருதினை வழங்கி வருகிறது.
- 1970-ஆம் ஆண்டு அவரது மரணத்திற்கு பின் அவரது படைப்பான பிசிராந்தையார்' நாடகத்திற்காக 'சாஹித்ய அகாடமி விருது' வழங்கப்பட்டது.

- *1990 ஆம் ஆண்டு தமிழக அரசு இவரின் நூல்களை எல்லாம் நாட்டுடைமை ஆக்கியது*
- *2001 – அக்டோபர் மாதம் 9 ஆம் தேதி, சென்னை தபால் துறை மூலமாக ஒரு நினைவு அஞ்சல்தலை அவரது பெயரில் வெளியிடப்பட்டது.*
- *இவரின் பெருமையை விளக்கும் விதமாக புதுவை அரசு இவரது இசையமுது பாடலின் இரண்டாவது பகுதியின் பாடலான 'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே மாண்புகள் நீயே என் தமிழ்த் தாயே' என்ற பாடலை தனது தமிழ்தாய் வாழ்த்து பாடலாக பாடப்பட்டு வருகிறது.*

***அவரின் புரட்சி மிக்க வரிகள்:***

1. *தமிழுக்கு அமுதென்று பேர் – இன்பத்*
   *தமிழ் எங்கள் உயிருக்கு நேர்*
2. *தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடாதே*
3. *எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
   *மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு*
4. *நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம்*
5. *வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா?*
6. *எங்கள் திருநாட்டில் எங்கள் நல்லாட்சியே*
7. *கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி*
8. *தமிழே உயிரே வணக்கம் தாய்ப்பிள்ளை உறவம்மா உனக்கும் எனக்கும்*
9. *வள்ளுவனை பெற்றதாற் பெற்றதே புகழ் வையகமே!*
10. *தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை*
11. *சொல்லாதன இல்லை பொதும்மறையான திருக்குறளில்*
12. *இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே*
13. *எல்லோர்க்கும் எல்லாம் என்று இருப்பதான இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையகம்.*
14. *இனிமை தமிழ் மொழி எமது – எமக் கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது'*

Sirpigal IAS Academy Think Imagine Feel Do



Sirpigal IAS Academy Think Imagine Feel Do